வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| சித்திரக்கலை | தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டங்கள் |
|---|---|---|

சித்திரக்கலை பள்ளித்திட்டம் - 13(2017)

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரம் | (சித்திரக்கலை I) | - | 100 புள்ளிகள் |
| | (சித்திரக்கலை II) | - | 100 புள்ளிகள் |
| | (சித்திரக்கலை III) | - | 100 புள்ளிகள் |
| | மொத்தம் | | 300 புள்ளிகள் |
| | இறுதிப்புள்ளி | = | 300 ÷ 3 |
| | | = | 100 புள்ளிகள் |

| | | | |
|---|---|---|---|
| சித்திரக்கலை I-பகுதி I | | - | 40 புள்ளிகள் |
| பகுதிII- | அ | - | 20 புள்ளிகள் |
| | ஆ | - | 20 புள்ளிகள் |
| | இ | - | 20 புள்ளிகள் |
| மொத்தம் | | - | 100 புள்ளிகள் |

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 3 | 31) 5 |
| 2) 4 / 4 | 12) 1 | 22) 1 | 32) 3 |
| 3) 3 | 13) 4 | 23) 4 | 33) 4 |
| 4) 4 | 14) 3 | 24) 3 | 34) 2 |
| 5) 2 | 15) 4 | 25) 4 | 35) 4 |
| 6) 2 | 16) 5 | 26) 5 | 36) 4 |
| 7) 2 | 17) 4 | 27) 4 | 37) 2 |
| 8) 3 | 18) 3 | 28) 3 | 38) 2 |
| 9) 3 | 19) 1 | 29) 1 | 39) 1 |
| 10) 3 | 20) 3 | 30) 3 | 40) 2 |

The National e-learning Portal for The General Education

**வினா 1**

1)

- ரபான் இசைப்பவன் - மல்யுத்தம் - குதிரை வீரன் - நடன மாது - போர் வீரன் - குழந்தைக்குப் பாலூட்டும் தாய்.

(4 புள்ளிகள்)

2)

- வாயில் மண்டபம், நீள்மண்டபம், கர்ப்பக்கிரகம் என்பன எம்பக்க ஆலயத்தில் காணக்கூடிய சிறப்பு அமைப்புகளாகும்.
- எம்பக்க ஆலய மரத்தூண்களிலும் செதுக்கல் வேலைப்பாடுகளைக் காணலாம்.
- எம்பக்க தேவாலயத்தின் கூரையில் 26 கை மரங்கள் ஒரு பலகை ஆணியுடன் பொருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது"மடொல் குருபாவ" என்று அழைக்கப்படுகிறது. இது இலங்கைக் கட்டக் கலைஞரின் கைவண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது.
- வாயில் மண்டபம் ,நீள்மண்டபம்,கருவறை என்ற மூன்று பகுதியை கொண்டது.
- வாயில் மண்டபம 10 தூண்களைக் கொண்டவை
- ஒவ்வொரு தூணிலும் சதுரங்கள் நான்கு வீதம் உள்ளன. இதற்கேற்ப 10 தூண்களிலும் 40 சதுரங் களில் செதுக்கல்கள் உள்ளன.
- நீள் மண்டபம்32 தூண்களைக் கொண்டவை. ஒவ்வொரு தூணிலும் சதுரங்கள் 4 வீதம் உள்ளன.
- இங்குள்ள செதுக்கல்களின் எண்ணிக்கை 128 ஆகும்.

(6 புள்ளிகள்)

3)

- எம்பக்க தேவாலயத்தின் செதுக்கல்கள் வேங்கை, சித்திரவேம்பு பலகையில் சிறு புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- பிரதானமான 5 கருப்பொருள்களின் கீழ் இச்செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 1. கற்பனை விலங்கு உருவங்கள் 2. விலங்கு உருவங்கள் 3. மனித வாழ்கையுடன் தொடர்புபட்ட செதுக்கல்கள் 4. கரை அலங்காரம் (லீஸ்தர) 5. பூக்கள் கொடிகள் அலங்காரம்.
- சதுர வடிவ தூண் மேற்பரப்பில் செதுக்கப்பட்டுள்ளது.
- சதுரவடிவ சட்டகத்தில் செதுக்கப்பட்டுள்ளது
- சட்டகத்தில் அரும்பு ,குந்திரிக்கம் போன்ற அலங்காரங்கள் காணப்படுகிறது.
- உணர்வு, அசைவு சிறப்பான முறையில் காட்டப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

**வினா 2**

1.

- தென்னை, பலா ,நாலிங்கம்,கித்துள் மரங்கள்

(4 புள்ளிகள்)

2.

- கண்டிய காலப்பகுதியில் மலையகப்பகுதி சித்திரங்களை காட்டிலும் தாழ்நிலப்பிரதேச ஓவியங்கில் சில மாறுபட்ட இயல்புகளை காணமுடியும்.
- நிரைகளாக வரைந்திருந்தல், தொடர்ச்சியான கதை வெளிப்படுதல், ஒரு பக்கத்துக்கு திரும்பிய உருவங்கள்.
- உருவங்களை சுற்றி மென்மையான இரேகைகளால் நிறைவைக் காட்டியிருத்தல்.
- ஒட்டு மொத்த சித்திரத்தினுள் அளவுத் திட்டம் கவனிக்கப்படாமை. போன்ற இயல்புகள் மலையக,கண்டிய மரபுகளில் காணப்பட பின்வரும் தாழ்நில ஓவிய இயல்புகள் மலையக ஓவிய மரபுகளில் இருந்து வேறுபட்டதாகும்
- தூரதரிசன இயல்புகளையும் முப்பரிமாண இயல்புகளையும் காட்ட முற்பட்டிருத்தல்.
- பினன்னியை அலங்கரிப்பதற்காக பலவித அலங்கார வடிவங்களை உபயோகித்திருத்தல்.
- ஆடை அணிகலன்களை அலங்காரமாக, விளக்கபூர்வமாக காட்டியிருத்தல்.
- ஐரோப்பிய பாணியில் அமைந்த கட்டட நிர்மாணம், தளபாடங்கள், ஆடைஅணிகள் காட்டப்பட்டிருத்தல்.
- மஞ்சள், நீலம், நரை பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்களை மெலலிய, கடும் நிறம் கொணட்தாக உபயோகித்தல், முப்பரிமாண இயல்பு வெளிப்படுத்தல்.
- பின்னணிக்குப் பொதுவாக சிவப்பு வர்ணத்தை விட சாம்பல், கறுப்பு, கடும் நீலம் போன்ற வர்ணங்களை உபயோகித்திருத்தல்.

(06 புள்ளிகள்)

3.

- கரகம்பிட்டிய விகாரைச் சுவரோவியங்களுள் ஒன்றாகும். புத்தர்நிலை அடைவதைத் தடுக்கும் வகையில் தூண்டுவதற்காக வந்த மாரனின் புதல்வியரான பேராசை, காதல், காமம் ஆகியயோரை இது குறிக்கிறது.
- மாரன் மகள்மார் இசைக்கருவிகளை இசைக்கும் களியாட்டக் காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது.
- மங்கையர்கள் அணிந்திருக்கும் ஆடையணிகள், இசைகக்ருவிகள், ஐரோபபிய செல்வாக்கைத் தழுவியதாகக் காணப்படுகிறது. இவை 19 ஆம் நூற்றாண்டுச் சமூகச் சூழலைக் காட்டுகினற்ன.
- தாழ்நாட்டு சித்திரக் கலையின் பொதுப் பண்புகளான அலங்காரம் விரிவான விபரம் ஆகிய பண்புகளை இவற்றிலும் காணலாம்.
- தொடர் கதை ஒன்றின் ஒரு பகுதி இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளது. தளத்தை முழுவதும் உபயோகித்து ஓவியம் வரையப்பட்டுள்ளது. நீல நிறப் பின்னணியை இவற்றுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.
- முப்பரிமாணத் தன்மையைக் காட்ட நுணுக்கமான வர்ண பேதங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, கபிலநிறம் போன்ற வர்ண பேதங்களை உபயோகித்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. நுணுக்கமாக வர்ணப் பயன்பாடு மூலம் முப்பரிமாண இயல்பைக் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது.
- உருவங்களைச் சுற்றி கறுப்பு நிறக்கோடு காணப்படுவதோடு அதற்காக நீல வர்ணம் பயன்படுத்தப்பட்டுள் ளமை இதன் சிறப்பியல்புகளாகும்.

(10 புள்ளிகள்)

**வினா 3**

1)

☞ தளம் முழுவதும் நிறையும் வகையில் கூடிய இடப்பரப்பினுள் வரையப்பட்டிருத்தல்

☞ போதிசத்துவர் வடிவத்தை மிகப்பெரிய பிரமாணத்தில் காட்டப்பட்டு இருத்தல் (பிரதான சரிதையின் பொருட்டு விசே'மான பிரமாணத்தில் பயன்படுத்தல்)

☞ உரிய நிகழ்வுக்கு ஏற்ற பின்னனி வடிவங்களை அமைத்தல்

☞ இயற்கை வடிவமைப்புகளுக்கிட்டிய தன்மை (மனித வடிவம், பிராணிகள், மரம், கொடி, கட்டிடம் ஆகியன)

☞ கலைத்தன்மையுடன் கூடிய தூரதரிசனத் தன்மை பின்பற்றி இருத்தல்

☞ பாவ வெளிப்பாட்டின் பொருட்டு முத்திரை மெய்நிலைகளைப் பயன்படுத்தி இருத்தல்

☞ வெளி அங்க இலச்சனங்களினூடாக சரிதை இயல்பை வெளிப்படுத்தல்

☞ வர்ணச் சாயல் (அயல் வர்ணம்)

☞ ஒளி நிழல் மூலம் முப்பரிமாணத்தன்மை வெளிப்படுத்தல்

☞ பிரகாசமான வர்ணச் சாயல்களும் மென்மையான இரேகைப் பயன்பாடும்

☞ மேலிருந்து பார்க்கும் தன்மையில் தூரதரிசன முறை பின்பற்றி இருத்தல்

☞ பக்கத் தோற்றப்பாட்டில் முகமும் பாதமும் வரையப்பட்டிருத்தல்

☞ உரிய நிகழ்ச்சிக்கு மேலதிகமாக சூழலைச் சிறப்பாகச் சித்தரித்தல் (4 புள்ளிகள்)

2) அஜந்தா குகைகள் இரு வாஸ்து முறையில் அமைக்கப்பட்டவை அவை

- ➢ சைத்திய மண்டபம்
- ➢ விகாரை மண்டபம்

**சைத்திய மண்டபம்**




இவை கற்பாறையை உள்ளே தோண்டிச் சென்று இறுதியில் வட்டமாகப் பூர்த்தி செய்து உள்ளதுடன் வட்ட வடிவை மையமாகக் கொண்டு கல்சைத்தியம் உருவாக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் நீளத்திற்கு தூண் வரிசையைக் கொண்டிருக்கும். மரத்தால் நிருமாணிக்கப்பட்ட அரைக்கோளவடிவ கூரையுடன் கூடிய கட்டிடத்தில் அரைவளைவுடைய வளைகளைக் கொண்டிருக்கும். இம்மண்டபம் பௌத்த துறவிகளால் தர்ம உபதேசம் செய்வதற்கும், கூட்டம் வைப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இலக்கம் 9, 10, 19, 26 குகைகள் சைத்திய மண்டப வகையைச் சார்ந்தவை இவற்றில் காணக்கூடிய கலை நிருமாணிப்புக்களாவன ஸ்தூபியும், தூண்களும் அவற்றில் உள்ள செதுக்கல்களும் ஓவியங்களுமாகும்.

**விகாரை மண்டபம்**

இவையும் கற்பாறையை உள்ளே தோண்டி நிருமாணிக்கப்பட்ட வீட்டின் தன்மையைக் கொண்டிருக்கும். சதுர அமைப்பைக் கொண்ட மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் பல அறைகள் காணப்படும். இவற்றிடையே இரு தட்டு மாடிகளும் உள்ளன. இவற்றிற்கு ஏறிச்செல்வதன் பொருட்டு படிவரிசைகளும் நிருமாணிக்கப்பட்டுள்ளன. அங்கு மத்தியில் உள்ள மண்டபத்தைச் சுற்றி அறைகள் காணப்படும். மேல் மாடிகளுக்கு வெளிச்சம் வருவதன் பொருட்டு துவாரங்கள் நிருமாணிக்கப்பட்டு உள்ளன. இவை பௌத்த குருமார்களின் வசிப்பிடமாகவும் காணப்பட்டது. (6 புள்ளிகள்)



3)
- ☞ ஐத்தந்த ஜாதக்கதை
- ☞ புத்தர் பெருமான் கிம்புளவத்புரத்திற்கு வருகை தரல்
- ☞விஜயனின் வருகை (சிங்கள வருகை)
- ☞ சுவர்ண கன்ஸ ஜாதக
- ☞வெஸ்ஸந்தர ஜாதக
- ☞அன்தமுனி ஜாதக
- ☞ சங்கஸ்ஸபுரத்திற்கு வருகை தரல்
- ☞அப்சரா வடிவம்

மேற்குறிப்பிட்ட ஓவியங்கள் 17 வது குகையில் வரையப்பட்டுள்ளது இவற்றில் சில ஓவியங்களை உதாரணமாகக் கொண்டு விளக்கப்பட வேண்டும். (10 புள்ளிகள்)

**வினா 4**

1. தர்மராச இரதம், அர்சுனன்இரதம், திரௌபதைஇரதம், வீம இரதம், சகாதேவ இரதம்

(4 புள்ளிகள்)

2. இந்தக் கோயில் கட்டப்பட்ட காலம் சோழர்களின் பொற்காலம்,இந்தப் சுமார் 7 ஆண்டுகளில் இந்த அற்புதக் கோயில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.கோயிலின் முக்கியமான கட்டடம் 150 அடி நீளமாகும். மிகப் பிரமாண்டமான விமானம் எகிப்தியப் பிரமிடுகளைப் போல கூர்நுனிக் கோபுரமாக அமைந்து கர்ப்ப கிரகத்திலிருந்து 216 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்ந்திருக்கின்றது. இம் விமானத்தில் 13 தளங்கள் இருக் கின்றன. அதற்கு மேல் பிரமரந்திர தளம் எனப்படும் சிகரம் உள்ளது. இது ஒரே கல்லால் ஆனது. 80 டன் எடை கொண்டது.இந்தக் கோயிலில் பிற்காலத்தில் கட்டப்பட்டவை முன் தாழ்வாரம், நந்தி மண்டபம், கருவூர்த்தேவர் கோயில், அம்மன் கோயில், சுப்பிரமணியர் கோயில் ஆகியனவாகும். நந்தி மண்டபத்திலுள்ள நந்தி ஒரே கல்லால் செய்யப்பட்டது. இதன் உயரம் 14 மீற்றர் ஆகும். நந்தி மண்டபம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படு கிறது. கருவறையினுள்ளே 12.5 அடி உயரமான பெரிய சிவலிங்கம் காணப்படுகிறது.

(6 புள்ளிகள்)

3. மகாவலிபுரம் நகரில் கடற்கரை ஓரத்தில் கற்பாறைகளில் செதுக்கப்பட்டு உள்ள "ஆகாய கங்கையின் இறக்கும்" என்னும் செதுக்கல் பல்லவ கலைஞர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாகக் காணப்படும் கலைப்படைப்பாகும். இதில் வெளிப்படுத்தப்படுவது பகீரதன் என்றும் முனிவா் தவம் செய்து சிவபெருமானிடம் வேண்டி ஆகாயத்தில் இருந்து கங்கை நதியைப் பூமிக்கு வரவழைத்த தன்மையை ஆகாயகங்கை என்னும் ஆக்கத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. தமக்கு கங்கை நதியின் வருகையினால் நீா் கிடைத்த மகிழ்ச்சியில் சந்தோஷப்படும் தேவா்கள், மனிதா், பிராணிகளின் வடிவங்கள் பலவற்றை இங்கு செதுக்கி உள்ளனா்.

(10 புள்ளிகள்)

**வினா 5**

1. கறகாளா, ஜீலியசீசா், பென்பேகியன், றஜன், டெசியா, பிள்ளையின் மாா்பளவுச்சிலை

(4 புள்ளிகள்)

2.

- மொசாய்க் சித்திரம் என்பது வா்ணக் கண்ணாடித்துண்டுகளை சுதையின் மீது ஒட்டி ஆக்கப்படும் கலை நிா்மாணமாகும்.
- ஈரமான சாந்தின் மீது கண்ணாடித் துண்டுகளை ஒட்டி உருவாக்கும் சித்திரம்
- இதற்கு உடைக்கப்பட்ட கண்ணாடித்துண்டுகள் / பீங்கான் துண்டுகள் / உலோகத்துண்டுகள் பயன்படுத்தப்படும் இத் துண்டுகள் டெசரி எனப்படும்.
- இச் சித்திரங்கள் இருபரிமானத் தன்மை கொண்டதாக காணப்படும்உருவங்கள் ஒரே தளத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால் தூரதரிசன கோட்பாட்டை காண முடியவில்லை
- உருவங்கள் நெட்டையாகவும் விறைப்புப்பாங்கானதாகவும் காணப்படும்
- அரச உருவங்களில் தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் காணப்படும்
- ஒளிபட்டுத் தெறிப்பதால் சித்திரங்கள் பளபளப்பானதாக காணப்படும் (6 புள்ளிகள்)

3.

- SANVITALE சன்விட்டல் தேவாலயத்திலுள்ளே அரசா்களின் மொசாய்க் சித்திரம் பலவும் காணக்கூடியதாக உள்ளது. இது விசேட கௌரவத்துடன் விசேடமான ஒன்றை காண்பிப்பதற்காக கலைஞா்களால் இவை நிா்மாணிக் கப்பட்டுள்ளது.
- “தியடோரா ராணியும், பணியாளா்களும்” என்ற மிகவும் பிரபல்யமா படைப்பொன்று இத்தேவாலயத்தில் உள்ளது. இதில் எளிமையான வடிவமைப்பும், நேரான உடல்வாகும் கொண்டு காணப்படுகிறது.
- இந்த தேவாயத்தில் பூசை செய்வதற்கு தங்கத்திலான பாத்திரம் பெண்களின் கைகளில் காணப்படுகின்றது.
- பெண்களின் உடைகளில் காட்டப்படுகின்ற உடை மடிப்புக்கள் கூட கண்ணாடி துண்டுகளால் இயற்கைத் தன்மையாக செய்யப்பபட்டுள்ளது.
- எல்லா பெண்களும் நீண்ட பெரிய ஆடைகளால் அலங்கரித்து இருப்பதோடு தியடோரா ராணியின் அரசகுலத்தை காட்டுவதற்கு தலையைச் சுற்றி ஒளி வளையம் அழகாக நிா்மாணிக்கப்பட்டுள்ளது.
- இப்படைப்புக்களில் உயிர்த்துடிப்புடன் கூடிய விசித்தரமான அழகைக் காணக்கூடியதாக உள்ளது.

(10 புள்ளிகள்)

**வினா 6**

1. கெசிறா, ஸ்பின்ஸ், றெகோரெப்பும், நொபெட், கப்றே, 2ஆம் நாம்செஸ்மன்னா் சிலை.

(4 புள்ளிகள்)

2. சமாந்திர இரேகை இரண்டிற்கும் இடையில் சித்திரத்தை வரைதல் கேத்திரகணித வடிவமைப்பை பயன்படுத்தல் இருபரிமாணப் பண்பு.

   மரபுரீதியான கற்பனைத் தன்மை.

   எழுத்து அலங்காரத்தைப் பயன்படுத்தல்.

   இரேகைக்கு முக்கியத்துவம் அளித்தல்.

   தட்டையான வா்ணப்பாவனை.

(6 புள்ளிகள்)

3. எகிப்பதிய கலையில் பெரும்பாலும் காணப்படுவது பாரம்பரிய மரபிற்கு உட்பட்டு, நிர்மாணிப்புக்களை உருவாக்கப்பட்டவையாகும், சித்திரம், சிற்பம் செதுக்கள் போன்ற ஆக்கங்களில் இப்பண்புகளைக் காணலாம். எனினும் ஒரு கால கட்டத்தில் சகல மரபுரீதிகளில் இருந்தும் எகிப்தியக்கலை விலகி உள்ளதை அக்நோடன் காலத்தில் காணலாம்.

இக் காலத்தில் சகல சம்பிரதாயங்களையும் அக்நோடன் மாற்றி அமைத்தான். அகநோக்குடன் சமய நம்பிக்கையின் அடிப்படையில் உருவான எண்ணக்கருக்களையும் மாற்றினார். கலை ஆக்கங்களிலும் இம்மாற்றத்தை விளக்கமாகக்காணமுடியும். மரபிநின்று விலகி இயற்கைப் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து சிற்பங்கள் சில இக்காலத்தல் நிர்மாணிக்கப்பட்டன.

- நெபர்ரீரி
- அக்நோடனும் நெபர்ரிரி வடிவும்

நெபர்ரிரி சிலை இக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இயற்கைப் பிரமாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும் அழகியான நெபர்ரீ அரசியினுடைய அழகை வெளிக்காட்டும் இந்த இயற்கை மனித வடிவ ஆக்கம் எகிப்திய கலைஞர்களிடம் காணப்பட்ட திறனை வெளிப்படுத்துகின்றது. நீண்ட அழகிய கழுத்து நீண்ட நாசி, மெல்லிய உடல்வாகு, கூர்மையான கண்கள் என்பன சிற்பத்தின் அழகிற்கு மெருகேற்றுவதுடன், அழகிய நீண் தலை அணியும் நிலையின் மதிப்பை வலுவடையச் செய்கின்றது. அதேபோல் அக்நோடனும், நெபர்ரிரியும் ஜோடியாக உள்ள சிலையும் மாற்றம் கொண்ட இக்காலத்து பண்புகளைக்கொண்ட சிறந்த சிலையாகும் றெகோரெப்பும் நொபேட்டும் ஜோடியாக உள்ள சிலையில் காணப்படும் மரபுரீதியான எகிப்திய பண்புகள் இச்சிலையில் காணப்படவில்லை. இயற்கைப் பிரமாணத்தின் அடிப்படையில் இச்சிலை அமைந்து உள்ளதே இதற்கு காரணமாகும். இக்காலத்தில் உருவாக்கப்பட்ட அரசஜோடி எனப்பெயர்கொண்ட செதுக்கலும் இயற்கைத் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்து செதுக்கப்பட்ட ஒன்றாகும். இதே போன்றுஎழுத்து வினைஞன் (கிறைப்ஸ்) எனப்படும் சிலையும் கேத்திரகணித முறையில் இருந்து விலகி, இயற்கைப் பண்புகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டதாகும்.

(10 புள்ளிகள்)